IN THE COURT OF JUDICIAL MAGISTRATE ARAKKONAM, RANIPET DISTRICT

PAGE NO.44/2020

DEPOSITION OF WITNESS

(Chapter XXIIII of Criminal Procedure

| | | |
|---|---|---|
| Calender | : | CC.99/2018 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution : PW-2 |

| | | |
|---|---|---|
| Neme | : | நித்தியக்குமாரி |
| Father's Name | : | வெங்கடேசன் |
| Village | : | மேல்பாக்கம் |
| Taluk | : | அரக்கோணம் |
| Caste | : | - |
| Calling | : | கூலி வேலை |
| Religion | : | இந்து |
| Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **21.01.2021.**

மு.வி.சத்தியப்பிரமாணம் தாக்கல் செய்யப்பட்டது.

***ஆஜர் எதிரியை பார்த்துள்ளேன்.12.05.2018 அன்று ஸ்ரீபெரும்புதூரில் எனது மகள் இஇஇ படித்துக்கொண்டு இருந்தார். நானும் எனது உறவினர் தயாளனுதட இருசக்கரவ வாகனத்தில் சென்று என் மகளை கல்லூரிக்கு சென்று அழைத்து வந்தோம். அழைத்த வரும்போது மாலை 6.45 மணிக்கு கல்லாறு பாலத்தின் மீ வரும்போது எதிரில் வந்த லாரி இடித்து விட்டது. அந்த லாரி எண்.டி.என்34டி9888. அந்த லாரியை ஓட்டி வந்தவர் ஆஜர்***

*எதிரிதான் அவர் பெயர் டில்லி என்று பின்னிட்டு தெரிந்துக் கொண்டேன். என்ன காரணத்தினால் விபத்த ஏற்பட்டது என்றால் லாரி வேகமாக வந்ததால் விபத்து ஏற்பட்டது. எனது மகள் தமிழ்செல்வி கீழே விழுந்ததில் டயர் தலையின் மீது ஏறிவிட்டது என்று சாட்சி அழுதுக்கொண்டே கூறுகிறார். எனது மகள் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். அதன் பிறகு அரக்கோணம் அரசு மருத்துவமணைக்கு சென்றோம். நாங்கள் வந்த இருசக்கர வாகனத்தை தயாளன் ஓட்டி வந்தார் அவருக்கு பின்னால் நான் உட்கார்ந்த இருந்தேன் எனக்கு பின்னால் என் மகள் உட்கார்ந்து இருந்தார். நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தின் எண்.டி.என்.73இசட்6976. எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை. எனது மகளை மருத்துவமணையில் பிரேத பரிசோதனை செய்து கொடுத்தார்கள். அதன் பின்னர் காவல் நிலையத்திற்கு சென்றோம். என்னுடன் காவல் நிலையத்திற்கு சஞ்சீவிராயன், பிரோம்குமார், சுரேஷ், முனுசாமி ஆகியோர் வந்தார்கள். தயாளன் என்பவர் அரக்கோணம் கிராமிய காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்.*

*கு.வி.*

*என்னுடைய கணவர் பெயர் என்ன அவர் எங்கு வேலை செய்கிறார் என்றால் வெங்கடேசன் இபியில் வேலை செய்கிறார். எனது மகளை அழைத்து வர என்னுடன் வந்த தயாளன் எந்த ஊரை சேர்ந்தவர் மேல்பாக்கம் தாட்கோ காலனி. என்னுடைய விலாசம் என்ன என்றால் பஜனை கோவில் தெரு. தயாளன் எனக்கு என்ன உறவு முறை என்றால் மாமா பையன். தயாளன் தான் இருச்கர வாகனத்தை ஓட்டி சென்றார் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு வீட்டில் இருந்து கிளம்பினோம் என்றால் மேல்பாக்கத்தில் இருந்து மாலை 3.30 மணிக்கு கிளம்பினோம். ஸ்ரீபெரும்பூதூருக்கு எத்தனை மணிக்கு சென்று சேர்ந்தோம் என்றால் 4.45, 5 மணி இருக்கும். ஸ்ரீபெரும்பூதூரில் இருந்து நான் தயாளன் மற்றும் எனது மகள் 3 பேரும் ஒரே வண்டியில் வந்தோம் என்றால் சரிதான். தயாளன் ஓட்டி வந்த வண்டியின் உரிமையாளர் யார் என்றால் தயாளன் தான். தயாளனின் வண்டிற்கான ஆர்.சி.புக்கை காவல் நிலையத்தில் கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. தயாளனுக்கு இருசக்கர வாகனத்தை ஓட்ட லைசன்ஸ் உள்ளதா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.*

தயாளனின் லைசன்ஸ் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை அதனால் அவருக்கு வண்டி ஓட்ட உரிமமே இல்லாமல் வண்டியை ஓட்டியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. கல்லாறு பிரிட்ஜ் குருகிய பாலம் அதில் ஒரு வண்டி தான் செல்ல முடியும் ஒரு லாரி தான் செல்ல முடியும் என்றால் ஆம். தயாளன் தான் வாகனம் ஓட்ட உரிமம் இல்லாமல் லாரி வந்துக்கொண்டு இருக்கும்போது சென்று விபத்தை ஏற்படுத்தினார் விபத்திற்கு அவர் தான் காரணம் என்றால் இல்லை. தயாளன் லாரி சென்ற பிறகு தான் சென்றிருக்க வேண்டும் என்றால் நாங்கள் அந்த பாலத்தில் சென்ற பிறகு தான் லாரி வேகமாக வந்தது. அந்த பாலத்தின் நீளம் 200 மீட்டர் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் தான் காத்திருந்து லாரி சென்ற பிறகு சென்று இருக்க வேண்டும், லாரி பாதியில் வரும்போது இருசக்கர வாகனத்தில் தயாளன் சென்றுள்ளார் என்றால் இல்லை நாங்கள் தான் முதலில் சென்றோம். லாரி வேகமாக வந்தத எங்களால் வண்டியை நிறுத்தவும் முடியவில்லை நேரமில்லை அவ்வளவு வேகமாக வந்தது. நாங்கள் வந்த வண்டி எந்த ஆண்டு வாங்கப்பட்டது என்றால் தெரியாது. பழைய வண்டியில் தயாளன் எங்கள் மூவரையும் ஏற்றி சென்றதால் பேலன்ஸ் இல்லாமல் எனது மகள் தான் தவறி கீழே விழுந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல லாரி தான் இடித்தது. லாரி இடித்து இருந்தால் எங்கள் 3 பேருக்குமே அடிப்பட்டு இருக்கும் என்றால் பாப்பா அந்த பக்கம் விழுந்து டயரில் மாட்டிக் கொண்டாள் நாங்கள் இந்த பக்கம் விழுந்த விட்டோம். நாங்கள் எந்த பக்கம் விழுந்தோம் என்றால் கம்பி இருந்தது அதன் பக்கம் விழுந்தோம். எங்களுக்கு காயம் ஏற்பட்டதா என்றால் லேசான காயம் ஏற்பட்டது. எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டோம் என்றால் நான் சிகிச்சைக்காக எந்த மருத்துவமனைக்கும் செல்லவில்லை எனது பாப்பாவை ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு எடுத்து செல்லும்போது தான் மருத்துவமனைக்கு சென்றேன். இந்த சம்பவம் 6.45 மணிக்கு நடந்தது

என்றால் சரிதான். காவல் நிலையத்தில் யார் அளித்தார்கள் என்றால் தயாளன். உடனே புகார் கொடுத்தோமா என்றால் அடுத்த நாள் காலை 13ம் தேதி கொடுத்தோம். எந்த காவல் நிலையத்தில் கொடுத்தார்கள் என்றால் தாலுக் ஆபிஸ் இருக்கும் காவல் நிலையத்தில் கொடுத்தார்கள். சம்பவம் நடந்த மருநாள் தான் புகார் அளித்தார்கள் என்றால் சரிதான். கல்லாறு பாலத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் எனக்கு தெரியாது. சாட்சிகள் பிரேம்குமார், சுரேஷ் த/பெ.செலவம், சஞ்சீவிராயன், சுரேஷ் த/பெ.ரவிசங்கர், முனுசாமி, அனைவரும் எனது உறவினர்கள் என்றால் சரிதான். என்னை எந்த காவல் அதிகாரி விசாரித்தார் என்றால் எஸ்.ஐ என்று நினைக்கிறேன். எந்த தேதியில் என்னை விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த அன்றே மருத்துவமணையில் விசாரித்தார்கள் அதற்கு பிறகு 3 நாள் கழித்து விசாரித்தார்கள். காவல் நிலையத்தில் எத்தனை கையெழுத்து போட்டேன் என்றால் எத்தனை என்று தெரியவில்லை. நான் எழுதிய பேப்பரில் உள்ள விவரங்களை படித்து காண்பித்தார்களா என்றால் இல்லை. எழுதி பேப்பரில் போட்டேனா என்றால் ஆம். இந்த விபத்திற்கு முழுக்க காரணம் தயாளன் தான் அவர் லைசன்ஸ் இல்லாமல் இருவக்கர வாகனத்தில் சென்று விபத்தை ஏற்படுத்தியவர் அவர் தான் அவர் மீது தான் போலிசார் வழக்கு பதிவு செய்து இருக்க வேண்டும் என்றால் சரியல்ல. லாரி ஓட்டுநர் மீ தான் தவறு. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், விபத்து நஷ்டயீடு பெறுவதற்காக எதிரியின் மீது போலிசார் போட்ட பொய் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. லாரி விபத்த ஏற்படுத்தியிருந்தால் எங்கள் 3 பேருக்கும் அடிப்பட்டு இருக்கும் நாங்கள் தான் பேலன்ஸ் இல்லாமல் விழுந்து விகட்டோம் எதிரியின் மீது எந்த தவறும் இல்லை அவர் 250 சிமெண்ட் மூட்டைகளை ஏற்றிக்கொண்டு பாதி வழியில் வரும்போது நாங்கள் தான் விபத்தை ஏற்படுத்தினோம் என்றால் இல்லை. நாங்கள் தான் முதலில்

பாதி பாலத்தில் சென்றுக் கொண்டு இருந்தோம் அதன் பிறகு லாரி வந்தது. இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் தயான் இல்லை அவருக்கு வாகன உரிமமும் இல்லை அதனால் தான் பயந்துக்கொண்டு அன்றைய தினமே புகார் அளிக்காமல் அடுத்த நாள் கொடுத்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், போலிசார் போட்ட பொய் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் கண் எதிரில் பார்த்தேன் எப்படி பொய் சாட்சியம் அளிக்க முடியும் என்று எதிரி அழுது கொண்டே கூறுகிறார். விபத்திற்கு காரணம் 3 பேர் இருசக்கர வாகனத்தில் சென்றது தான் என்றால் லாரி இடித்ததால் தான் நடந்தது. லாரி எங்களை தொடவே இல்லை என்று சொன்னால் நாங்கள் தான் சிலிப்பாகி விழுந்துவிட்டோம் என்றால் லாரி தான் இடித்தது.